www.padippakam.com



# போர்த்துக்கேயருக்குத் 'தண்ணி' காட்டிய சங்கிலி

24

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

### வரலாற்றுத் தொடர்


சங்கிலி மன்னன் கி.பி. 1542 இல் தங்களால் மதமாற்றம் செய்யப்பட்டவர்களை சிரச்சேதம் செய்ததையிட்டு போர்த்துக்கேயர் ஆத்திரம் கொண்டாலும் அவனது வலிமைக்கஞ்சி சிறிது காலம் எதுவும் செய்ய முடியாது பொறுமையுடன் காத்திருந்தனர்.

பின்பு கி.பி. 1543 இல் மார்ட்டின் அப்போந்சோ து சூசா (Martin Aponso De Sousa) என்பவனது தலைமையில் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றி சங்கிலியனைப் பிடிப்பதற்காக ஒரு படை புறப்பட்டது. கடல் மார்க்கமாகப் புறப்பட்ட இந்தப் படையினர் வந்த கப்பல்கள் கடும் காற்றுக் காரணமாக திசை மாறி பசுத் தீவு (Ilhas das Vacas) என போர்த்துக்கேயர்களால் அழைக்கப்பட்ட நெடுந்தீவில் கரை சேர்ந்தது. இதனால் அவர்களது நோக்கம் உடனடியாக நிறைவேற முடியாமல் போய் விட்டது.

ஆனாலும் போர்த்துக்கேயப் படை அங்கு வந்த செய்தியறிந்து அங்கு சென்ற சங்கிலியனின் அண்ணனும் எதிரியுமான பரநிருபசிங்கம் போர்த்துக்கேயத் தளபதி அபொன்சோ து. சோசாவை சந்தித்து "சங்கிலியனைத் துரத்திவிட்டு தன்னை அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு அரசனாக்கினால் அவர்களது வியாபார நடவடிக்கைகளுக்கும், மதமாற்றத்திற்கும் உதவுவதாகக் கூறினான்.

பணம் பறிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்த போர்த்துக்கேயத் தளபதி அவனது வேண்டுகோளை ஏற்றுக்கொள்பவன் போல் நடித்து அவனிடம் இருந்த முத்துக்களையும் 5000 பர்தாங்கு நாணயத்தையும் பறித்துக் கொண்டு சென்று விட்டான்.

இதற்கிடையில் சங்கிலியனை வீழ்த்த வேண்டுமானால் அவனுக்குக் கீழ் சிற்றரசுகளாக இருக்கும் வன்னிய அரசுகளைக் கைப்பற்ற வேண்டும் என்று கண்டியரசனான விக்கிரமபாகு போர்த்துக்கேயருக்கு ஆலோசனை தெரிவித்தான். அதற்கு முதற்படியாக திருக்



கோணமலையைக் கைப்பற்றி கொழும்பில் நிறுவியது போல் அங்கு ஓர் பெரிய வர்த்தக சாலையையும் கோட்டையையும் அமைக்குமாறு அவன் அவர்களைக் கேட்டுக் கொண்டான். 1543-ம் ஆண்டு மிகேல் பெரேரா என்னும் தளபதியின் தலைமையில் போர்த்துக்கேயப் படை கொழும்பில் இருந்து திருக்கோணமலையைக் கைப்பற்றச் சென்றது. ஆனாலும் போர்த்துக்கேயரின் படையெடுப்பைப் பற்றி எவ்வாறோ முன்கூட்டியே அறிந்திருந்த சங்கிலி அப்படைகளை இடையில் வைத்தே தாக்கி அழித்து விரட்டி விட்டான். இந்தப் படையெடுப்பால் போர்த்துக்கேயருக்கு அதிகம் செலவானதால் அவர்கள் மறுபடியும் திருகோணமலை மீது படையெடுக்க எண்ணவில்லை. ஆனால் கண்டியரசன் விக்கிரமபாகு மீண்டும் அந்தப் படையெடுப்பை நடாத்தும் படி போர்த்துக்கேயத் தளபதிக்கு கடிதத்துக்கு மேல் கடிதமும் தூதுக்கு மேல் தூதும் அனுப்பியதோடு அந்தப் படையெடுப்பை நடாத்துவதற்கான செலவுக்காக 10 ஆயிரம் பொற்காசுகளையும், வைரக்கற்களையும் அனுப்பி வைத்தான். கி.பி. 1544 இல் போர்த்துக்கேயருக்கு அனுப்பி வைக்கப்பட்ட இந்தப் பொற்காசுகளையும், வைரக் கற்களையும் சங்கிலியின் படைகள் தந்திரமாக பறித்துச் சென்று சங்கிலியனிடம் சேர்த்துவிட்டன.

## மக்களை மதம் மாற்றுவேன் என்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்திலேயே அதற்கு ஒத்துக் கொண்ட சொய்சா அதற்கு வேண்டிய மதபோதனைகளையும் பயிற்சிகளையும் பெறுவதற்காக அவர்கள் இருவரையும் கோவாவுக்கு அனுப்பினான்.


இது இவ்வாறிருக்க கோட்டை அரசன் புவனேகபாகு ஆந்திரே து சொய்சா எனும் போர்த்துக்கேயத் தளபதியின் வேண்டுகோளின்படி அவனது பிள்ளைகள் மூவரையும் கிறிஸ்தவ மதத்தில் சேர்த்தான். அதில் மூத்தவன் நோயினால் இறந்து போக மற்ற இருவருக்கும் தொம் யுவாம், தொம் லூயிஸ் என்று பெயர் மாற்றமும் செய்யப்பட்டு கிறிஸ்தவ முறைப்படி ஞானஸ்னானமும் செய்து வைக்கப்பட்டது. இதில் மூத்தவனான தொம் யுவாம் யாழ்ப்பாண இராச்சியம் தம் முன்னோர்களின் இராச்சியம் எனவும் தற்போது அரசாளும் சங்கிலி தென்னிந்தியாவிலிருந்து வந்த அந்நியன் என்றும் அவனைத் துரத்தி விட்டு தன்னை அதற்கு அரசனாக்கினால் தான் அங்கிருக்கும் குடிமக்களையும் கிறிஸ்தவர்களாக்கி போர்த்துக்கேயத் தளபதியின் இஷ்டப்படி ஆட்சி நடாத்துவேன் என்றும் அந்திரே து சொய்சாவிடம் தெரிவித்தான்.

மக்களை மதம் மாற்றுவேன் என்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்திலேயே அதற்கு ஒத்துக் கொண்ட சொய்சா அதற்கு வேண்டிய மதபோதனைகளையும் பயிற்சிகளையும் பெறுவதற்காக அவர்கள் இருவரையும் கோவாவுக்கு அனுப்பினான்.

கி.பி.1546 இல் அவர்கள் பயிற்சியை முடித்துக் கொண்டு கோவாவிலிருந்து புறப்பட்ட போது பெரியம்மை நோய் வந்து இறந்து விட்டார்கள். இதனால் ஏமாற்றமடைந்த போர்த்துக்கேயத் தளபதி அப்போது கொழும்பில் தனது பிரதிநிதியாக இருந்த து.காஸ்திரோ என்பவருக்கு யாழ்ப்பாண அரசன் சங்கிலியை வீழ்த்துவதற்கு அவன் எதிரியான பரநிருப சிங்கனை கிறிஸ்தவனாக்கி அவனை யாழ்ப்பாண அரசனாக முடிசூட்டி வைக்க ஏற்பாடு செய்யும்படி தகவல் அனுப்பி வைத்தான்.

து.காஸ்திரே, மிகைல் பெரேரா என்பவனின ஒரு படையுடன் யாழ்ப்பாணம் அனுப்பினான். அப்போது சங்கிலியை எதிர்த்துக் கொண்டு பரநிருபசிங்கன் ஊர்காவல்துறையில் தங்கியிருந்தான். பெரேரா அவனை அங்கு வந்து சந்தித்து தங்களது விருப்பத்தை சொன்னபோது அதற்கு "இவ்வாறு தான் முன்பு நீங்கள் என்னை நம்ப வைத்து மோசம் செய்து என்னுடைய முத்துக்களையும் பொருளையும் அபகரித்துச் சென்று விட்டீர்கள்" என்று கூறி மறுத்துவிட்டான்.

இம்முறை அப்படி நடக்காது நாங்கள் நிச்சயம் உனக்கு உதவி செய்வோம் என்று பெரேரா அவனுக்கு உறுதி வழங்கியபோது, தானும் தன் பரிவாரங்களும் கோவாவுக்குச் சென்று நேரடியாக பெரிய தளபதியைச் சந்தித்து ஒரு உடன்படிக்கையைச் செய்து கொண்டால் மட்டுமே அவர்களுடன் ஒத்துழைக்க முடியுமென பரநிரூபசிங்கன் கண்டிப்பாகக் கூறிவிட ஏதோ காரணத்தால் அதை விரும்பாத பெரேரா தனது



முயற்சியைக் கைவிட்டுத் திரும்பிச் சென்று விட்டான்.

யாழ்ப்பாணத்தில் நிலைமை இவ்வாறிருக்க தென் பகுதியில் முன்பு போத்துக்கேயர் பக்கம் நின்ற தந்தைக்கு எதிராக சங்கிலியின் உதவியுடன் படையெடுத்துச் சென்று, தந்தையைக் கொன்று தன் தமையனாகிய புவனேகபாகுவை கோட்டை அரசனாக்கிய மாயா துன்னை பின்பு ஆட்சிக்கு வந்தபின் தமயனும் தந்தையின் வழியில் போர்த்துக்கேயரின் கைப்பொம்மையாக இருப்பதைக் கண்டு வெறுத்து அவனை அகற்றுவதற்கு வேண்டி கி.பி. 1545 இல் சங்கிலியின் உதவியுடனும், கண்டியரசனாகப் பதவியேற்ற ராஜசிங்கனின் உதவியுடனும் கோட்டை இராச்சியத்தின் மீது படையெடுத்துச் சென்றான். ஆனால் கோட்டை அரசன் புவனேகபாகுவின் பக்கம் போர்த்துக்கேயப் படை நின்றது. மாயா துன்னை முயற்சி தோல்வியடைந்தது.

பின்பு கி.பி.1547 இல் மாயா துன்னைக்கு உதவி செய்ய வேண்டி சங்கிலி தஞ்சாவூர் அரசனிடம் இருந்து உதவி கேட்டு ஒரு படையை வரவழைத்துக் கொண்டு தனது படைகளையும் மாயாதுன்னையின் படைகளையும் ஒன்று திரட்டி எல்லோருமாகச் சேர்ந்து கோட்டையை முற்றுகையிட்டார்கள். சங்கிலியின் போர்த்திறமையாலும் அவனது வீரர்களது உக்கிரமான சண்டையாலும் கோட்டை அரசன் புவனேகபாகுவின் படைகளும் போர்த்துக்கேயரின் படைகளும் தோல்வியைத் தழுவும் நிலை இருந்தது. கி.பி .1547 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் திகதி ஆரம்பித்த இச் சண்டையில் தாம் தோல்வியடைய நேரிட்டால் இலங்கையை விட்டு வெளியேற வேண்டி நேரிடும் என அஞ்சிய போர்த்துக்கேயர்கள் கோட்டை அரசன் புவனேகபாகுவின் பேரன் விதிய பண்டார என்பவன் மூலமாகச் சூழ்ச்சி செய்து மிக இரகசியமாக மாயதுன்னையின் படையில் சில சிங்களத் தளபதிகளை தம்பக்கம் இழுத்து விட்டார்கள். இதனால் அந்தப் படையெடுப்பும் தோல்வியடைய மாயாதுன்னைக்கு உதவி செய்யப் போய் சங்கிலி அவமானப்பட்டுத் திரும்பினான்.

இரண்டு தடவை தன் தமையன் மீது படையெடுத்துத் தோல்வி கண்ட மாயா துன்னை போர்த்துக்கேயர் மீது தான் கொண்ட வெறுப்பைக் கைவிட்டு தன் அண்ணனாகிய புவனேகபாகுவையும் அவர்களையும் தந்திரமாகப் பிரித்து விட்டு, தான் அவர்கள் பக்கம் சேர்ந்து கோட்டை அரசுரிமையைக் கைப்பற்றத் திட்டமிட்டான். அதற்கென கி.பி.1549 இல் போர்த்துக்கேயரின் இலங்கை அதிபதிக்கு தூதனுப்பி தமையன் மீது கோள் சொல்லி தான் அவர்கள் மேலாண்மையை ஏற்று நடக்க விருப்பமும் தெரிவித்தான்.

கோட்டை அரசன் புவனேகபாகு தங்கள் நண்பனாக இருந்தாலும் அவனை விட வீரனாகவும் அதே நேரம் வெளியில் இருந்து கொண்டு தனக்கு தொல்லை தரும் மாயாதுன்னையை தங்கள் பக்கம் எடுத்துக் கொள்வதே நல்லது எனப் போர்த்துக்கேயர்கள் தீர்மானித்தார்கள். அதன பின் புவனேகபாகுவிற்கு தொடர்ந்து இடையூறு விளைவிக்க ஆரம்பித்தார்கள்.

**- நக்கீரன்**